



## கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கால்நடை பராமரிப்பு

### மானியக் கோரிக்கை எண் : 6

அறிவிப்புகள்
2021 – 2022

காலநடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கால்நடை பராமரிப்பு

மானியக் கோரிக்கை எண். 6

அறிவிப்புகள்
2021-2022


**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

**1. கால்நடைகளின் நலனைப் பாதுகாக்க அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஏழு கோடியே எழுபத்தி ஆறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏழாயிரத்து எழுநூற்று அறுபது கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்படும்.**

கால்நடைகளின் நலன்களைப் பேணுவதற்காகவும், தரமான சிகிச்சை வழங்குவதற்காகவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.7.76 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7,760 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்படும். இந்த முகாம்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழுநீக்கம், தடுப்பூசி, ஆண்மைநீக்கம், செயற்கைமுறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சைகள், சிறிய மற்றும் பெரிய அறுவை சிகிச்சைகள், மகப்பேறியல் சிகிச்சைகள், அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை வழங்கப்படும்.

**2. தொலை தூர கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கு முதல் உதவி, செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் ஆகிய சேவைகளை வழங்க இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 50 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்படும்.**

குக்கிராமங்களில் விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்கள் மற்றும் இழப்புகளை தடுக்கும் வகையிலும் அங்குள்ள கால்நடைகளுக்கு முதல் உதவி மற்றும் செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் அளிக்கும் வகையிலும் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ. 2.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 50 புதிய கால்நடை கிளை நிலையங்களை அமைக்கப்படும்



**3. கால்நடைகள் மற்றும் கோழி இனங்களின் உடல் நலத்தை பேணவும் மருத்துவ சிகிச்சை வழங்கவும், சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளை கால்நடை வளர்ப்போர் அறிந்து கொள்ளவும் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 25 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்படும்**

மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழி இனங்களுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை அளிக்கவும், அவற்றின் உற்பத்தியை பெருக்கவும் விவசாயிகளின் நலன் கருதியும் முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ. 3.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் 25 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்படும்.

**4. ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த / கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற முப்பத்தி எட்டாயிரத்தி எண்ணூறு பெண்களுக்கு எழுபத்தி ஐந்து கோடியே அறுபத்தி மூன்று இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பயனாளி ஒருவருக்கு தலா ஐந்து செம்மறியாடுகள் / வெள்ளாடுகள் வழங்கப்படும்.**

ஏழ்மை நிலையிலுள்ள குறிப்பாக, கணவனை இழந்த / கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களை தொழில் முனைவோர் ஆக்குவதற்காக **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ. 75.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் 38,800 பெண்களுக்கு தலா 5 செம்மறி ஆடு / வெள்ளாடுகள் 100 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.



**5. கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக 85 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு ஐம்பத்தி நான்கு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

மாநிலம் முழுவதும் உள்ள கால்நடை மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், தரமான சிகிச்சையை கால்நடைகளுக்கு வழங்குவதற்காகவும், **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.54.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கி உதவியுடன், 85 கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**6. அரியலூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு மூன்று கோடியே நாற்பத்தி ஆறு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

கால்நடைகளில் நோய் கண்டறிதல், நோய் கண்காணிப்பு, நோய் தடுப்பு பணிகளுக்காகவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.3.46 கோடி நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் அரியலூர், கன்னியாகுமரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.



**7. மாநிலத்தில் பசுந்தீவன இருப்பை அதிகரிப்பதற்காக நான்கு கோடியே எண்பத்தி இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 18 தீவன வங்கிகள் நிறுவப்படும்.**

மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும் கால்நடைகளின் நலனைப் பாதுகாப்பதற்காகவும், **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.4.82 கோடி நிதி ஒதுக்கீட்டில் 18 தீவன வங்கிகள் முன்னோடியாக நிறுவப்படும். இதற்காக தரிசு நிலங்களாக உள்ள பொது மேய்ச்சல் நிலங்கள் அறிவியல் ரீதியாக மேம்படுத்தப்பட்டு, பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டு, சேமிக்கப்படும் பசுந்தீவனம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**8. நாட்டுக் கோழி உற்பத்தியினை அதிகரிக்க, நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணை மற்றும் கோழிக்குஞ்சு பொரிப்பகம் ஒன்பது கோடியே நாற்பத்தி இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் நிறுவப்படும்.**

அறிவியல் ரீதியிலான மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நாட்டுக் கோழிக் குஞ்சுகள் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளுக்கு வழங்குவதற்காக **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.9.42 கோடி நிதி ஒதுக்கீட்டில் நாட்டுக் கோழி இனப்பெருக்கப் பண்ணை மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பகம் திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் நிறுவப்படும்.



**9. விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் வெறிநோயினை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவதற்காக வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் எழுபத்தி ஏழு இலட்சத்து முப்பத்தி ஆறாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடத்தப்படும்.**

விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் கொடிய நோயான வெறிநோயை தடுப்பதற்காகவும் மனிதர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 77.36 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வெறிநோய் தடுப்பூசி முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம், அனைத்து மாவட்டங்களிலும் மாதம் 1 முகாம் வீதம் 12 மாதங்களுக்கு நடத்தப்படும்.

10. செல்லப்பிராணிகள் மருத்துவத்தில் உயர் ஆராய்ச்சி, நவீன நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை முறைகளையும் மருத்துவ கல்வியையும் சர்வதேச தரத்தில் வழங்க செல்லப்பிராணிகளுக்கான பன்னோக்கு கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் (முதல் நிலை) சென்னை நந்தனத்தில் ஏழு கோடியே தொண்ணூற்றி ஒன்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏற்படுத்தப்படும்

செல்லப்பிராணிகளுக்கான பன்னோக்கு கால்நடை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் (முதல் நிலை) சென்னை, நந்தனத்தில், **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூபாய் 7.99 கோடி நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும். இம் மையத்தில் செல்லப்பிராணிகள் மருத்துவத்தில் உயர் ஆய்வு, நவீன நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை



முறைகளை கையாள்வதுடன், சர்வதேச தரத்திற்கீடான சிகிச்சையியல் மருத்துவக் கல்வியினை அளித்து மருத்துவ நிபுணர்களுக்கு தொடர் கல்வியினை அளிக்கவும் வழிவகை செய்யப்படும்.

**11. தமிழகத்தின் வடமேற்கு மண்டலங்களில் நிலையான கால்நடை உற்பத்திக்காக தீவனவிதை உற்பத்திப் பிரிவு ஒரு கோடியே நாற்பத்தி ஒன்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்**

கால்நடைகளின் உற்பத்தித் திறன் மற்றும் இனவிருத்தியை மேம்படுத்த, பசுந்தீவன உற்பத்தியை பெருக்கு வதற்காக **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 1.49 கோடி நிதி ஒதுக்கீட்டில் வடமேற்கு மண்டலங்களில் பெருகிவரும் கால்நடைகளின் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய இனத்தீவனப் பயிர்களில் ஆராய்ச்சி மேற்கொள்ள 25 ஏக்கர் நிலப் பரப்பளவில் தீவன விதை உற்பத்திப் பிரிவு அமைக்கப்படும்.



**12. தருமபுரி மாவட்டத்தில், திருச்சிகருப்பு செம்மறி ஆட்டின ஆராய்ச்சி நிலையம் ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை இருப்பிடமாகக் கொண்ட திருச்சிகருப்பு செம்மறி ஆடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கவும், மரபியல் திறனை உயர்த்தவும் **முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் 1.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சி கருப்பு செம்மறியாட்டின ஆராய்ச்சி நிலையம் தருமபுரி மாவட்டத்தில் 200 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படும்.

**13. மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாட்டின சிறுவிடை கோழியின வள மையம் ஒரு கோடியே ஐம்பத்தி இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.**

அதிக நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகவும், குறைந்த பராமரிப்புச் செலவு கொண்டதாகவும் இருப்பதனால் சிறுவிடை கோழி இனங்களை அழிவிலிருந்து பாதுகாக்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 1.52 கோடி நிதி ஒதுக்கீட்டில் மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் சிறுவிடை கோழியின வள மையம் நிறுவப்படும். இம்மையத்தின் மூலம் உயர்ரக நாட்டின சிறுவிடை கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு கோழி வளர்ப்போருக்கு அளிக்கப்படும்.



**14. தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தமிழகத்தின் பட்டணம் செம்மறி ஆட்டின வள மையம் ஒரு கோடியே தொன்னூற்று ஏழு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.**

தமிழகத்தில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் செம்மறி ஆட்டினங்களில் முக்கியத்துவம் வாய்ந்த பட்டணம் செம்மறி ஆட்டினத்தினை பாதுகாக்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 1.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பட்டணம் செம்மறியாட்டின வள மையம் நிறுவப்படும்.

**15. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டு பிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தின் வளாக வசதிகள் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.**

கால்நடைப் பண்ணையாளர்களுக்குத் தேவையான பண்ணைத் தளவாடங்களை குறைந்த விலையில் உற்பத்தி செய்து வழங்கும் நோக்குடன், இம்மையத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 2.50 கோடி நிதி ஒதுக்கீட்டில், பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவி மயமாக்கல் மையத்தின் வளாக வசதிகள் மேம்படுத்தப்படும்.



**16. தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்காக விலங்கு வழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ஒரு கோடியே அறுபத்தி ஓர் இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நிறுவப்படும்.**

கால்நடைகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும், மனிதனுக்கு உயிர்ச் சேதம் விளைவிக்கும் முக்கியத்துவம் வாய்ந்த நோய்களை கண்டறிதலில் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூபாய் 1.61 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், "விலங்குவழி பரவும் நோயறி ஆய்வகம் மற்றும் சுகாதாரத் தளம்" நிறுவப்படும்.